தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உயஎசு	மலர்
சஅ	ஆனந்த, பங்குனி (1975 — மார்ச்சு — ஏப்ரல்)	கஉ

மெய்ஞ்ஞானத்தின் கொலு விருக்கையில்

அஜ்ஞாநத்தின் வழக்கீடு.

புலவர் பதிப்பு

25-5-1919-இல் தஞ்சாவூரில் நிகழ்ந்த கரந்தைத் தமிழ்ச் சங்கத்து ஏழெட்டாவது ஆண்டுகளின் கூட்டு விழாவில்,

திருப்பாப்புலியூர் அடிகள்

ஸ்ரீலஸ்ரீ மெய்ஜ்ஞாந சிவாச்சாரிய சுவாமிகள்

தலைமையின் கீழ்

திருவாளர்

பா. வே. மாணிக்கம் நாயக்கரவர்களால்

எழுதி யனுப்பிப் படிக்கப்பெற்றது.

மேற்படியார் 6—2—1922-இல் எழுதிய முகவுரையுடன்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரால் பதிப்பிக்க லாயிற்று.

1924

All rights reserved by the Author

Copies can be had from the author's agent at
"Murugan Tamilagam", Andar Street, Teppacolam P. O.,
Trichinopoly.

உ

பதிப்புரை.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஏழெட்டாவது ஆண்டுகளின் கூட்டு விழாவில், திருவாளர் பா. வே. மாணிக்கம் நாயக்கரவர்களால் எழுதிப் படிக்கப்பெற்ற "அஜ்ஞாநம்" எனப் பெயரிய கட்டுரை, கழகம் கெழுமி இருந்தோரும் அல்லோருமாகிய பல்லோர் வேண்டுகோளை முன்னிட்டுப் பதிப்பிடலாயிற்று. பதிப்பித்த பின் கட்டுரையின் ஆசிரியர் கருத்திற் கிணங்க நூற்றைம்பது படிகள் அவ்வெண் கொண்ட பெருங் கல்வியாளர்களுடைய ஆய்வுரைகளை யவாவி யனுப்பலாயின அன்னோருள் முப்பத் தறுவர்களே கட்டுரையின் உட்பொருள்களை யொட்டியும் வெட் டியும் பல்வேறு வகைகளாக ஆய்வுரைக ளனுப்பினர். ஏனை யோர் இருமுறை நினைப்பூட்டப்பெற்றும் ஏதேனு மோர்வகைய விடையீயும் அளிகூர்ந்திலர். அவர்கள் உள்ளப்பாங்கை முற் கொண்டறியாது "அஜ்ஞாநத்தை" நாமனுப்பி யல்லற் படுத்தி யதற்கு மன்னிப்பு வேண்டுகின்றோம்.

நம் கைக்குக் கிட்டிய ஆய்வுரைகளைக் கட்டுரையின் ஆசிரி யர்பாற்படுத்தினேமாக, அவர் கட்டுரையுடன் ஆய்வுரைகளை யும் தம் கட்டுரையின் உள்ளுறைப் பொருள் விளக்கத்தையும் சேர்த்துப் புலவர் பதிப்பாக வொன்றும், மாணவர் பதிப்பாக வொன்றும் தாமே கூடிய விரைவில் வெளியிடுவதாகத் தெரி வித்ததன்பின் இக்கட்டுரை மாத்திரம் சங்கத்தின் பதிப்பாக வெளியிடலாயிற்று.

இவ் வெளியீட்டினுள் கட்டுரையிற் காணுங் கருத்துக்கள் சங்கக் கூட்டத்தார் பொதுவாக ஒப்பென்றுவது தப்பென்றுவது கொண்டன ரென்று கற்பித்துக் கோடற்பாலதன்று. சங்க விழாவிற் படிக்கப்பெற்றமையாலும் பல்லோர் வேண்டியபடி யாலும் சங்கப் பதிப்பாக வெளிவருகின்றது.

த. வே. உமாமகேசுவரன்,

சங்கத் தலைவர்

ஓம்.

முகவுரை.

உலகமுளதேல் அஜ்ஞாநமுளதாம்; அஜ்ஞாநமுளதேல் உலகமுளதாம். உலகமிலதேல் அஜ்ஞாநமிலதாம்: அஜ்ஞாநமிலதேல் உலகமிலதாம். ஆகலின், அஜ்ஞாநத்திற்கு முன்னுமின்று பின்னுமின்று என்பதை மறுக்கவியலாது. இஃதிவ்வாருயிருக்க அஜ்ஞாநத்திற்கு முகவுரை. முன்னுரை, பாயிரம் எனவொன்று மொழிவதும் அஜ்ஞாநமே யன்ரே? 'பாயிரமில்லது பனுவலன்று' என்பார்க்கு முகவுரை மொழியாது விடுவதும் அஜ்ஞாநமாகுமாகலானும், சொல்லினும் சொல்லாதிருக்கப்பெறினும் அஜ்ஞாநப் பட்டத்தினின்றும் தப்ப வழியின்மையானும், முகவுரை சொல்லவே துணிந்தேன்.

என் அஜ்ஞாநவுரை ஏடுகளைக் கண்ணுற நேர்ந்த எனது நண்பர்கள் பலர், இவ்வஜ்ஞாநத்தின் வரலாறு என்னென்று வினவாதிருந்திலர். முதல் முப்பொருள்களுள் ஒன்ருகிய அஜ்ஞாநத்திற்கு [1] இயலாறு உண்டேயன்றி [2] வரலாறு இலதென அறியா அஜ்ஞாநத்தானே எனது நண்பர்கள், அஜ்ஞாநத்திற்கு வரலாறு கேட்கலாயினர். அஜ்ஞாநத்திற்கு வரலாறு வினவுவதும் தவறு; சொல்வதும் தவறு. ஆனல் அஜ்ஞாநப் [3] பேராட்சி வளத்தின் (அஜ்ஞாந பரத்வம்) சான்ருகத் தவறிழைத்தலே சரியினும்சரி, என உணர்ந்து இவ்வஜ்ஞாநத்தின் வரலாறு கூறவியைந்தேன்.

1911-ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து என் அலுவலினின்றும் அடுத்தடுத்து நீண்ட விடுமுறைகள் பெற்று, விடுமுறைக் காலங்களைத் [4] தரைச்செலவினும், அறிவு நூலாராய்ச்சிகளினும், அவைகளைச் சார்ந்த சொற்பொழிவுகளினும் செலவிட்டு வந்ததில், நம் அருமைத் தமிழ்மொழி என் முயற்சிகளில் பெரும் பங்கைக் கொண்டது. இவ்வாறு நிகழுங்காலத்து, 1919-ஆம் ஆண்டின் தொடக்கத்தில், தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துக் கருமத் தலைவர் (Secretary) திருவாளர் அ. கணபதி பிள்ளையவர்கள் என்னைக் கண்டு சங்கத்து ஆண்டுவிழா அணித்தில் நடைபெறுமென்றும், அவ்விழாவில் யான் ஒரு பெருஞ்

1. உள்ளதாம் இயற்கை. 2. தோற்றம், பிறப்பு.
3. சிறப்பின். 4 பயணம் போதலிலும்.

சொல் நிகழ்த்த வேண்டுமென்றும், வேண்டிக் கொண்டதோடு, அவ்வுரையின் [1] தலைப்பு இன்னதெனத் தெரிவித்தல் வேண்டு மென்றும் வற்புறுத்தினர் தனக்கெனவாழாத் தமிழ்த் தொண்டர்களிற் சிறந்தோராய எனது நண்பர் வேண்டுகோளை யான் எஞ்ஞான்றும் மறுக்கும் வலியிலேனாகலின், அவர் விரும்பிய வாறே சொற்பொழிவு செய்வல் என்று ஒப்பினேன். ஆயினும் எடுத்துக்கொள்ளும் [2] பொருள், விழாவின் தலைவருக்கும் [3] குழுவிற்கும் ஏற்றதொன்றாக இருக்கவேண்டியது இன்றியமையாதது ஆதலால் கூடுங்குழுவின் [4] உள்ளப்போக்குயான் அறிவேனாயினும், தலைவரும் இன்னாரென்று தெரிந்தே பெருஞ் சொல்லின் தலைப்புத் துணியவேண்டும் என்று மொழிந்தேன்.

இது கேட்ட நண்பர், 'பெரும்பாலும் திருப்பாதிரிப்புலியூர் அடிகள் மெய்ஞ்ஞானியாரவர்களே தலைமை பூண ஒப்பக்கூடும்' என விடையிறுத்தனர் யான் 'அவ்வாறாயின் யான் 'அஜ்ஞாநம்' பேசுகின்றேன்' என விளையாட்டாகச் சொல்லினேன். "ஏன் 'அஜ்ஞாநத்தை' விரும்பினீர்கள்?" என்று அவர் வினவ, "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும் [5] ஓயாது நுகர எங்கும் எப்போதும் மலிந்து கிடப்பது 'அஜ்ஞாநம்' ஒன்றேயாதலின் அதனைப்பற்றி யான் ஓயாது விழா நாட்கள் முழுவதினும் பேசுவதானாலும், [6] பொருட்பஞ்சமும் முயற்சி வேண்டுதலும் இல்லை; அம்மலிவு அறிந்தே அஜ்ஞாநத்தை விரும்பினேன்" என்று விளக்கினேன் அதுகேட்டு அவரும் முற்றிலும் ஆர்வம் உற்றனர்.

அதன்பின் சங்கவிழாவின் ஏற்பாடுகள் எல்லாம் எனக்குத் தகவல் ஒன்றும் இன்றியே செய்யப்பெற்றன. இதனிடையில், 31—3—1919-இல் யான் விடுமுறையினின்றும் மீண்டு என் அலுவலை வேலூரில் ஒப்புக்கொண்டேன். ஒப்புக்கொண்ட இரண்டாவது திங்கள் தொடக்கத்தில் சங்க அமைச்சரிடமிருந்து [7] அஞ்சல் வழியாகப் பதிப்பிட்ட விளம்பரமொன்று கிடைக்கப் பெற்றேன். அதில், என் பெயரோடு பொருத்தி. 'அஜ்ஞாநம்' என்று குறித்திருந்தது. அது கண்டபோது, அச்சேர்க்கை மிகவும் பொருத்தமானது, பொய்யென்பதிலாதது என்று பெரு மகிழ்வுற்றே னெனினும். பல்லாண்டுகள் அலுவலினின்றும்

1. பெயர் 2. விஷயம். 3. கூட்டம் 4. அபிப்பிராயம்.
5. இடைவிடாது அனுபவிக்க (திருக்குறளிலிருந்து எடுத்தாண்டது). 6. விஷயக்குறைவும். 7. தபால்.

விடுமுறை பெற்றிருந்து அணித்தில் வேலை ஒப்புக்கொண்டமையின், கரந்தை விழா நாட்களில் அவண் சென்று அஜ்ஞாநத்தை மொழிவதற்கு [1] இடங்கேடாக இருந்தபடியுணர்ந்து சிறிது மகிழ்ச்சி குன்ற நேர்ந்தது.

என்றாலும், அஜ்ஞாநப் பெருவிருந்தை யானும் சங்கக்குழுவும் இழந்து விட [2] உள்ளமொன்றாது, யானே சென்று அஜ்ஞாநம் நவிலும் [3] ஊழ் இன்றாயினும், என் அஜ்ஞாநத்திற்குக் கொடுத்திருந்த ஒன்றேகால் நாழிகை நேரத்திற்கு வேண்டிய அளவு ஏடுகள் எழுதியாவது அனுப்புவதே சரி எனத் துணிந்தேன்.

என் அலுவலின் இடைபிடையே சிறுநேரங்களைத் திருடிக் கையச்சுப் பொறி (Typewriter) யால் அஜ்ஞாநத்தை அடித்து முடிய 24—5—1919 ஆயிற்று. என் [4] 'நிறைமொழியாணையிற் கிளந்த' அஜ்ஞாந மந்திரம் முடிந்த அப்பொழுதே அதன் வன்மை [5] கண்கூடாகத் தோன்றத் தொடங்கிற்று.

அடுத்தநாள் இருபது நாழிகைக்குள் அஜ்ஞாந வேடுகள் யான் தங்கியிருந்த வாழைப்பாடி யென்னும் சிற்றூரினின்றும் கரந்தை சேரவேண்டியிருந்ததால் அஞ்சல் வழியே அனுப்ப முயன்றேன். ஆனால் அஞ்சல்வண்டிக் குதிரைக்கு [6] ஊறு நேர்ந்து வரவேண்டிய போழ்தில் வரவில்லை வாடகைக்கு நடக்கும் தமியங்கி வண்டி (Motor Bus) யில் ஆள்வசங் கொடுத்தனுப்பவும் இயலாது தமியங்கியின் பொறி (Engine) கெட்டு வாராது நின்று விட்டது. ஏடுகள் எழுதி முடிந்தும் அனுப்ப இயலாததற்கு யான் வருந்தியது உணர்ந்த பொதுவேலைக் கண்காணி (Public Works Department Overseer) ஒருவர், தன் ஈருருளி (Bicycle) வண்டிமீது சேலம் சென்று ஒரு காலாள் (Peon) கையிற்கொடுத்து இருப்புவழி வண்டி (Railway Train) யில் கரந்தைக் கனுப்புவதாக ஒப்பி ஏடுகளை வாங்கிச் சென்றனர் அவ்வாறு சென்ற நண்பர் சேலம் சுங்க எல்லை சேர்வதன் முன் உருளி (Wheel) யில் முள் தைத்து காற்றுக் கழன்றுபோக, நடந்து சென்றும், வண்டிக்கு விளக்கின்மையால் சில செந்தலைக் காவலர் (Constables) களிடம் முட்டுண்டும், இறுதியில்

---

1 இடைஞ்சல். 2. மனங்கொள்ளாமல். 3. விதி. அதிர்ஷ்டம் 4. கற்றுவல்ல பெரியோர் கட்டளையை மேற்கொண்டு சொல்லிய (தொல் காப்பியத்தினின் றெடுத்தாண்டது). 5. பிரத்தியக்ஷமாக. 6. துன்பம்.

பொது வேலை மன்றக் கட்டிடத்தைச் (Public Works Department Office) சேர்ந்து, அவ்விடம், கள்ளை அவன் குடித்தானோ அன்றி அவனைக் கள் குடித்ததோ என்பது தெரிவதற் கியலாத நிலையிற் கிடந்த காலாள் ஒருவனே இருந்தானாகலின், அவனை எழுப்பி நிறுத்தி அழைத்துப் போய்த் திருச்சிராப்பள்ளி வழியாகத் தஞ்சைக்குச் சீட்டு வாங்கிவாவென்று அனுப்பினர். அக்குடியன் மதுரைக்குச் சீட்டு வாங்கிவந்து வண்டியிலும் ஏறிவிட்டான். ஆனாலும் வண்டி புறப்படும் தருவாயில் பொது வேலைக் கண்காணியாருக்கு ஐயம்வந்து சீட்டை வாங்கிப் பார்க்க மதுரை யென்று இருக்கக்கண்டு, கள் ஞானம் சிறிது கலையும்படி அவன் கவுள்களிற்றுக்கி, திருச்சிராப்பள்ளி யடைந்ததும் வேறுசீட்டு தஞ்சைக்கு வாங்கிக்கொண்டு போகும்படி நோவ நோவக் கற்பித்து அவனை அனுப்பினர் எனப் பின்னால் தெரிய வந்தது.

இத்தகைய அஜ்ஞாந [1] ஒட்டோலக்கங்களோடு சென்ற அஜ்ஞாந ஏடுகள் கரந்தையில் தக்க வேளையிற் சேர்ந்து திருப்பாதிரிப்புலியூர் அடிகள் மெய்ஜ்ஞாநியார் கொலுவில், எனக்காக எனது நண்பர் ஒருவரால் அரங்கேற்றப் பெற்றன.

யானே அஜ்ஞாநமாகவிருந்து, மெய்ஜ்ஞாநத்தை ஏசுகின்ற முறையில் [2] (நிந்தாஸ்துதி) [3] முப்பொருளுண்மைகளை விளக்கிக் காட்டும் முயற்சியுடன் எழுதிய அவ்வேடுகளைக் கழகத்திற் படித்தாண்டும் அவ்வஜ்ஞாநப் பெருமந்திரம் தன் ஒப்புயர்வின்றிய வன்மையால் குழீ இயினோரை மயக்கத்தி லாழ்த்தியதெனக் கழகம் புக்கிருந்த சில நண்பர்கள் சொல்லக் கேட்டு இறும்பூதெய்தினேன். அங்ஙனமே இனி இவ்வஜ்ஞாநப் பதிப்பைக் கண்ணுறுவோர்க்கும் அத்தகைய மயல் மேற்கொள்ளாதபடி இம்முகவுரை எழுதலாயிற்று.

இப்போது வழங்கி வரும் வைதிக சித்தாந்தம் என்னும் கோட்பாடுகளையும் இப்போது நம்மவர்கள் சிறு பான்மை யோரே கற்று வருவதாலும், இதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வழங்கி வந்ததும் வைதிக சித்தாந்தத்திற்குச் சிறிது மாறுபட்டதும் தொல்காப்பியத்தில் விரவிக்கிடப்பதுமான கந்தழிக் கொள்கை இப்போது மறைந்திருப்பதாலும், யான் ஆராய்ந்த எக் கொள்கைகளிலும் இக் கந்தழிக் கொள்கையே

---

1. திருவிழாச் சிறப்புக்களோடு. 2. பழிப்பதுபோலப் புகழ்த்திறம்புனைதல். 3. பதிபசுபாசம்.

இயற்கை உண்மைகளுக்கும், அறிவுநூல், எண்ணூல், அளவை நூல் முதலாயினவற்றோடும் [1] முரண்படாது நிற்கின்றது என்று தோன்றியபடியாலும், அவ்வாறு மறைந்து கிடக்கும் பண்டைத் தமிழ் நாட்டுக் கந்தழிக் கொள்கையைச் சிறு பிள்ளைகளும் உளங்கொள்ளும் விளையாட்டு நடையில் எழுத எண்ணித் துணிந்தேன். அஃதெம்மட்டில் நிறைவேறியதென்பது ஓதுவோரே மதிக்கற்பாலது.

இக்கட்டுரையின் இறுதிப் பகுதியில் அஜ்ஞாந மெய்ஜ்ஞாந வேற்றுமைகளுக்கேற்ப, வடிவு வேற்றுமைகளும் இயற்கையிலமைந்திருப்பவைகளை மிகவும் சுருக்கமாகச் சொல்லியுள்ளேன். இப்பகுதி எழுதியுள்ள அளவில் எளிதில் உணரக் கூடியதன்று. ஒன்றேகால் நாழிகை நேரத்திற் படிக்கவேண்டிய அளவே கட்டுரை எழுதவேண்டி யிருந்த படியாலும், இப்பகுதியிற் சொன்ன பொருள் அஜ்ஞான மெய்ஜ்ஞாநங்களோடு ஒன்றுபட்டதாகையாலும், விளக்கிற்பெருகுமாதலாலும் மிகவும் சுருங்கச் சொல்ல நேர்ந்தது.

ஆயினும் ஐரோப்பியர்கள் டார்வின் (Darwin) என்பாருக்குப் பின் கண்டறிந்த இயற்கை யுண்மைகளையும், இன்னுங் காணாதிருக்கின்ற பெரும் பகுதிகளையும் நம் தமிழ் முன்னோர் பல்லாயிரம் யாண்டுகளுக்கு முன்னரே நன்குணர்ந்திருந்தார்களாதலாலும், அதன் விரிவு ஐரோப்பியர்களுக்கும் ஓர் புதுக் கல்வியைக் கொடுக்கக் கூடியதாதலாலும், இப்பகுதியை ஆங்கிலத்தில் எழுத விரும்பித், திருச்சிராப்பள்ளியில் 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் 'வடிவோடியைந்த அறிவின் தோற்றம்' 'The Evolution of Intellect in coordination with Form' என்னுந் தலைப்பில் மூன்று பெருஞ் சொற்கள் மொழியலாயின. இன்னும் பொருள் முடிந்தவுடன் அதனையும் வெளியிட எண்ணியிருக்கின்றேன்.

இச்சிறு சுவடியைக் கண்ணுற நேருங் கல்வியாளர்கள் அவரவர்களுக்குத் தோன்றும் குற்றங்குறை ஐயப்பாடுகளை அருள்புரிந்து எனக்கு எழுதுவார்களாயின் யான் நன்றியறிதலுடையவனாவேன்.

தங்கல் - சீத்தா நகரம்,
6—2—22

பா. வே. மாணிக்கம்.

1. மாறுபடாமல்,

உ

மெய்ஜ்ஞாநத்தின் கொலுவிருக்கையில் அஜ்ஞாநத்தின் வழக்கீடு.

எனது தம்பியாயினும் தலைவரவர்களே! பிள்ளைகளாயினும் பெரியோர்களே! தலைக்கு மிஞ்சிய தம்பி*க்கும், கைக்கு மிஞ்சிய பிள்ளைக†ளுக்கும் பணியவேண்டிய முறைப்படி பணிகின்றேன்: என் பணிவையோம்புவீர்களாக!

உ. இப்போது நுமது தலைவராகிய மெய்ஜ்ஞாநத்திற்கு யான் தமைய‡னென்பதும், உங்களுக்கு யான் மூதாதை $யென்பதும், எல்லோருக்கும் நன்ருகத் தெரியுமாஞலும், இவ்வஜ்ஞாநத்தையா உறவு கொண்டாடுவதெனக் கூசி வெளிப்படையாக ஒப்புக்கொள்ள மாட்டீர்கள். ஒப்புக்கொள்ளாமை மாத்திரமா? இங்கே பேசவந்திருப்பது அஜ்ஞாநமல்லவேயல்லவென்றுகூடப் பச்சைப் பொய்யும் சொல்லத்துணிவீர்கள்! ஆயினும், அது இயற்கையேயென்று யான் உங்களை மன்னிக்கின்றேன் எனது நண்பர் ஒரு ஐயர். அவர் தந்தை மடைத்தொழிலாளராயினும் தன் பிள்ளையைப் படிப்பித்து - அருமறையன்று ஆங்கிலம் படிப்பித்து - மகன் டெப்புட்டி தாசில்தார் என்கிற ஓர் சிறிய நாட்டாண்மை வேலைக்கு வரவே, தானும் அவரோடுடனுறைந்து வந்தனர். யான் இந்நண்பரில்லமோர்முறைசென்றபோழ்து, கால்நடையிலும் கைவீச்சிலும் வீட்டுத் தலைவர் போன்றும், உடையொழுங்கிற் ருழ்ந்தும் தோன்றிய அவரை யின்னுரென வறிய விரும்பி, எனது நண்பரை நோக்கி, 'யாரிப்பேர்வழி?' யென்று வினவ, எனது நண்பர், அவர் தன் மடைத்தொழிலாள (He is my cook) ரென்று ஆங்கிலத்திற் புகன்றனர். அவ்வளவுவரை ஆங்கிலத்தின் பொருளை நுட்பத்தி லுணர்ந்த தந்தை, சினமுகத்தோடென்னை நோக்கி, 'ஐயா, நான் அடுப்புக்கோலி நெருப்பு மூட்டிய மனை வேறு; சமைத்த கறி கற்றறி மோனையாகிய இந்தப் பையல்தான்.' என்றனர். ஆகலின்,

---

* அண்ணன் பேச்சுக் கேளாது நடக்கும் தம்பி.

† பிரம்படிப் பருவந் தாண்டிய பிள்ளைகள்.

‡ மெய்ஜ்ஞாநத்திற்கு அஜ்ஞாநம் முற்பட்டதாகையால்.

$ எல்லோரும் அஜ்ஞாநத்திருந்தே பிறக்கவேண்டியிருத்தலின்

வெளிப்பகட்டு உட்பகட்டு ஒன்றேனுமில்லா இவ்வஜ்ஞாநத்தையா நீங்கள் உங்கள் மூதாதை யென்றும், தலைவர் தம் தமைய னென்றும், ஒப்புக்கொள்ளப் போகிறீர்கள்? இல்லவே யில்லை. ஆனாலும், என் குடியில் வாழையடி வாழையென வந்த உங்கள் திருக்கூட்டத்திற்கு யான்தான் மூதாதை யென்பதை யான் நிலை நாட்டாமலோ விடுவேன்? விட்டேனேல் யான் அஜ்ஞாநமல்லே னாயிடு வேனன்றோ?

௩. அன்றியும், 'நீ அந்தக் காலங்கண்ட அஜ்ஞாநம் அல் லவே யல்ல அவன் ஆங்கில வாட்சி வந்த நாள் முதல் எங்க ளூரை விட்டு ஓடிவிட்டான். * எங்கெங்கோ கெட்டலைந்து கேடுகெட்டு, நான்காண்டுகளுக்கு முன்னே ருஷியாவுக்குச் சென்று உதையுண்டான்; பின் ஜெர்மனி, துருக்கி சென்று பின் னும் உதையுண்டான் †. இப்போது அந்த அஜ்ஞாநம் ஆப்கானி ஸ்தானத்திலிருக்கிறா ‡ னென்று கேள்வி. இங்கே நீ யாரோ வேற்றாள்; அஜ்ஞாநமென்று பொய்ப் பெயர் புனைந்து வந்து நிற்கின்றனை. போ போ' என்று கூடச் சொல்லிவிடுவீர்கள் ஏனெனில், மூத்த முறையில் என் பிறப்புரிமையாகிய பட்டத்தை, யான் சற்றுக் கண்ணயர்ந்தது பார்த்து, நீங்கள் ஒன்றுபட்டு, மோசஞ்செய்து கவர்ந்து என் தம்பியாகிய மெய்ஜ்ஞாநத்திற்குக் கொடுத்தீர்களன்றோ? அதனாற்றான், என்னை யானல்லவென்று இப்போது புரட்டுப் பேசுகின்றீர்கள். உங்களுக்கு இந்தப் புல்லறிவு புகட்டியது இன்னாரென்பது எனக்கு நன்றாகத் தெரி யும். எனக்கா உங்களால் மறைக்கக்கூடும்! ஆரிய நாட்டில் அண்ணன் இராமன் பட்டத்தைக் கவர்ந்து, தம்பி பரதனுக்கு அளித்த தயரத கைகேயிகளும், அதற்குப் பழிவாங்க இரண்டண் ணன்மார்கள், வாலி இராவணர், பட்டங்களைப் பிடுங்கித் தம்பியர் சுக்கிரீவ விடணர்களுக்கு அளித்த இராமனும், உங்களுக்கு இத்தகாத வறிவு புகட்டியுள்ளனர். ஆனால் அந்த இராமப் பேதையைப் போல என்னைத் துரத்திவிடவா உங்களால் முடியும்! அந்த வாலி யிராவணப் பூச்சிகளைப் போல இந்த அஜ்ஞாநத்தை நசுக்கவா உங்களால் முடியும்! நானே என் பட்டத்தைத் தம்பி மெய்ஜ்

---

* ஆங்கில ஆட்சியால் அஜ்ஞாநம் ஒழிந்ததென்பது.

† ஐரோப்பியப் போரில் அஜ்ஞாநத்தால் நுழைந்து முட்டுப்பட்ட நாட்டவர்களைச் சுட்டுகின்றது.

‡ இக்கட்டுரை எழுதிய காலத்தில் ஆப்கானியர்கள் போரில் தலையிட முயன்றிருந்தனர்.

ஞாநத்திடத்து உள்ளக் கனிவால் சற்று விட்டுக் கொடுத்தால் கொடுப்பேனே யல்லாது. வலுக்கட்டாயத்தால் நீங்கள் மோசஞ் செய்து கவர்ந்து கொடுக்க ஒருகாலும் ஒருப்படவே மாட்டேன்.

ச. என் மூதுரிமையை எவ்வாறு புறக்கணிக்கத் துணிந்தீர்கள்? எவ்வாறு மறந்தீர்கள்? நீங்களெல்லோரும் இவ் வஜ்ஞாநத்தோடு பிறந்தீர்களா அல்லது மெய்ஜ்ஞாநத்தோடு பிறந்தீர்களா? சொல்லுங்கள். உங்களிடத்தில் மெய்ஜ்ஞாநம் எப்போது வந்தான்? எனக்கு நீண்ட நாளைக்குப் பின்னரன்றோ? அப்படிப் பின் வந்ததுமன்றி, பெரும்பான்மை நீங்கள் என்னோடு தானே பழகி வருகின்றீர்கள்? நான் உங்களோடு பழகியதில் மாத்திரமா மூத்தவன்? இந்த வையம் உண்டானபோது உடனெக்க விருந்தது நானு? அல்லது இப்போது கிளம்பிய விந்த மெய்ஜ்ஞாநமா? நீங்களே கடவுளாணைக்கு அஞ்சிச் சொல்லுங்கள் பார்ப்போம். மெய்ஜ்ஞாநமோ முந்தா நாளையச் சிறுவன் நீடித்து என்னைப் போல வாழ்பவனு மன்று. இத்தகைய நீர்க்குமிழி போன்ற இச்சிறுவனைக் கோரி ஏன் தவறிழைத்தீர்கள்?

ரு. இருக்கட்டும். உங்களுக்குப் புல்லறிவு புகட்டிய தயரதன், கைகேயி, இராமன் ஆகிய மூவர்களும் கேட்போர் கேள்விக்கு மறுமொழி புகலவாவது சில பொற்றற் பொருட்டுகளை யீட்டி வைத்திருந்தனர் உங்களுக்கு அத்தகையனவும் கிடையாவே. அந்தோ சுக்கிரீவன் மனைவியை அவனண்ணன் கவர்ந்தன னென வோர் குற்றங் கூறுவர். அவ்வாறு மெய்ஜ்ஞாநத்திற்கு இழப்பதற்குக் கூட மனைவி மக்களுங் கிடையாரே! தம்பி வீடணன் நன்னெறியாளனென்று பட்டங் கொடுத்த தென்பர். அவ் வாறே தம்பி பரதனும் நன்னெறியாளனென்பர். பட்டம் தன் மகனைவிட்டுப் பிறழ்ந்து பரதனுக்குப் போயதென்ப துணர்ந்த கோசலையும்,

> 'முறைமை யன்றென்ப தொன்றுண்டு மும்மையின்
> நிறைகுணத்தவ னின்னினு நல்லனால்' *

அதாவது, 'மூத்தோனிருக்க இளையோன் பட்டந்தாங்குவது முறைமையல்ல வென்பது இவ்வையத்து நெறியொழுங்கில் உண்டு; ஆனாலும், உன்னைவிடப் பரதன் நிறை குணத்தவன்

---

* கம்பராமாயணம்.

நல்லவன்.' என்று சொல்லிக் கோசலை தேற்றித் தேறினள். அவ்வாறு தேறுவதற்கேனும் இம்மெய்ஜ்ஞாநத்திற்கு ஏதேனும் நன்னெறி நற்றன்மை மருந்திற்குமுண்டா? ஐயோ! கெட்டீர்! இம்மெய்ஜ்ஞாநத்தின் பொறுக்கலாற்றுக் கொடுந்தன்மையைக் கேளுங்கள்! கேளுங்கள்! என்னருமந்த செல்வர்களே!

சு. இந்த மெய்ஜ்ஞாநத்திற்குக் குழவிகளையும் கிழவர்களையும் கண்டால் பிடிக்கவே பிடிக்காது*. ஆணேனுஞ்சரி பெண்ணேனுஞ்சரி அவர்கள் மழலைப்பருவங் கடந்து வளர்ந்து திரளத் திரளவே அவர்களிடம் மெய்ஜ்ஞாநம் சிறுகச் சிறுக நண்பு பாராட்டுவன் கிழமாகவாக இம்மெய்ஜ்ஞாநம் சொல்லாமல் நழுவிவிடப் பார்ப்பன். பழைய வுறவால் கிழங்கள் இவனை இறுகப் புல்லினும், நாளடைவில் விட்டோடிப் போகின்றனன். உங்கள் பிறப்பிலிருந்து இறப்பு வரையிலும், அவ்வாறே பிறப்புகள் தோறும், உங்கள் இளமை முதுமை ஆண்பால் பெண்பால் என்பன போன்ற உடன்பாட் டெதிர்மறைத் தன்மைகளை வேற்றுமைப் படுத்திப் பாராது ஓரமின்றி, உள்ளன்போடு, உங்களுடைய நன்மைக்குந் தீமைக்கும், இன்பத்திற்கும் துன்பத்திற்கும், உங்களோ டிடைவிடாது கூடவிருந்து உழல்வது யானேயன்றோ?

எ. இந்த மெய்ஜ்ஞாநத்திற்குச் செய்ந்நன்றி கொல்வதே பிறவித் தன்மை என தேழைச் செல்வர்காள்! ஏமாந்தீர்கள்! ஏமாந்தீர்கள்! புறப்பகட்டுக் கண்டு ஏமாந்தீர்கள்! நீங்கள் பள்ளிக்கூடங்களில் இந்த மெய்ஜ்ஞாநத்திற்கு எவ்வளவு பணங் கொடுத்து உடலுழைத்து அவன் விருப்பம் போனபடி யெல்லாம் நடந்து கதறினீர்கள்? அதற்கெல்லாம் உங்களுக்குக் கைக்கு மெய்யாகக் கிடைத்தது என்ன? பிரம்படி, மணையேற்றம், அண்ணாந்தாள், திட்டு குட்டு, மொட்டு, திருகு, கிள்ளு, அடி உதை, துறத்து, வெருட்டு†! ஐயோ! பேதைமை! பேதைமை! அத்தனையும் பொறுத்து நீங்கள் பெற்றுக்கொண்டும், உங்களில் மிகுதியாகப் பெற்றவர்களிடத்தே இம்மெய்ஜ்ஞாநம் வரவே மாட்டேனென்று உதறிவிட்டனன். சிறுபான்மையோ

---

* சிறுவர்களுக்கு மெய்ஜ்ஞாநம் வருவதற்குக் காலம் செல்கிறபடியாலும், கிழவர்களுக்கு மெய்ஜ்ஞாநம் குறைந்து போகின்றபடியாலும் இவ்வாறு உவமப்படுத்தலாயிற்று.

† பண்டைத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் இத்தகைய பலவித ஒறுத்தல்கள் நடந்துவந்தன. ஆங்கில ஆட்சியில் இவைகள் தடுக்கப்பட்டிருக்கின்றன.

ரிடத்து வரப்போக விருந்தானுனாலும். - ஐயோ! என்னென்று சொல்வேன்! நினைக்க வயிற்றெரிச்சல் கொள்கின்றன. என்னருமந்த பிள்ளைகாள்! உங்களுக்குச் சின மூளும்படி ஒருவன் அறைந்து விடுவானுனால், அத்தருவாயில் இம்மெய்ஜ்ஞாநம் உங்களை நட்டாற்றிற் கவிழ்த்து விட்டு இருந்த விடந் தெரியாமல் ஓடிவிடுகிறுன். நான்றுன் உடனே வந்து உங்களுக்கு உதவியாக நிற்கின்றேன். உங்களுக்குத் துணுக்குறும்படியான ஓரிடுக் கண் நேர்ந்தால், அப்போதும் இம்மெய்ஜ்ஞாநம் சொல்லாமல் ஓடிவிடுகிறுன். அப்போதும் நீங்களெற்குத் தவருற்றியனவெல்லாம் பொறுத்து. நான்றுன் உங்களுடனிருந்து நலந்தீங்கெல்லாம் உடனுகர்பவன். இம்மாதிரியாகத் தக்க வேளைகளில் உங்களை மோசஞ்செய்து விட்டோடும் மண்குதிரையைப் போன்ற இம்மெய்ஜ்ஞாநத்தை ஏனப்பா கோரினீர்கள்?

அ. இந்த மெய்ஜ்ஞாநத்திற்கு எப்போதும் உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்வதே தொழில். இவன் உண்டாம்போது ஒரு கொழுக்கட்டை போல உருவமுங் கிடையாது *: குந்தக் குடிசை கிடையாது; ஒதுங்கப் புறந்திண்ணை கிடையாது: கட்டத் துணி கிடையாது; உண்ணச் சோறு கிடையாது. ஒன்றுமில்லா வறுமையை இவனுடன் கொண்டுவந்த செல்வம். தம்பியென்றிளகிக், கால் நிறுத்திக், கட்டமைத்து, வாயில் பலகணிகளமைத்து, நீர் கழிக்க வழி, காற்றுடவழி, முதலானவையும் அமைத்து, ஓடு மேய்ந்து, கடப்பை மாடியில் கீரை முளைவிப்பது போல †, வெப்பந் தாக்காதபடி சம்பு போலக் கூரை வளர்த்தி, உங்களெதிரே யிருக்கும் இவ்விடுதி ‡. யொன்று தந்தேன். இம்மெய்ஜ்ஞாநம் அதிற் குடிபுகுந்து கொண்டு இருப்பதற்கு நன்றி பாராட்டாமல், என்னையும், யானளித்த திருமாளிகையையும் கண்டபடி வைகின்றனன்; கேளுங்கள் அவன் வைவதை —

---

* ஆன்மாவிற்கு மலவாசனை அதாவது அஜ்ஞாநசம்பந்தம் இல்லாத வரையில் உடல் கிடையாதாகையாலும், வினைப்போகமே உருவெடுத்து நுகரும் போகமானபடியாலும், மெய்ஜ்ஞாநத்திற்கு உரு முதலிய கிடையாவெனல்.

† கடப்பை யென்னும் ஊரில் மாடி வீடுகள் கட்டும்வகை, சுவர்களின் மீது மரச் சட்டங்களைப் பரப்பி, அவைகளின் மீது மூங்கிற்றட்டிகளை யிட்டு. மேலே சவட்டுமண் ஒரு முழ உயரத்திற்குக் கொட்டிக், கீரைவிதைத்து வைப்பது. இது வெப்பம் தாக்காத படிக்குச் செய்வது.

‡ உடலையே ஓர் கட்டிடமாக விவரிக்கப்படுகிறது.

'காக மோடுகழு கலகை நாய்நரிகள் சுற்று சோறிடு
துருத்தியைக்
காலி ரண்டுநவ வாசல் பெற்றுவளர் காமவே
ணடன சாலையை
மோக வாசைமுறி யிட்ட பெட்டியை முமலமிகுந்
தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமிதத்து கும்பியை முடங்க
லார்கிடை சரக்கினை
மாக விந்த்ரதனு மின்னை யொத்திலக வேத மோதிய
குலாலனார்
வனைய வெய்யதடி கார ஞனையமன் வந்த
டிக்குமொரு மட்கலத்
தேக மானபொயை மெய்யெனக் கருதி யைய வையமிசை
வாடவோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல சிற்சு கோதய
விலாசமே.' *

நான் அளியிற்றந்த இவ்விடுதியை இவ்வாறுதான் நன்றியின்றி வைகின்றனனே, ஓரிமைப்பொழுது இதைவிட்டு அப்புறத்தேயிருப்பனோ? எளிதில் விடவே விடான். இவ்வீட்டில் ஓர் சிலந்தி † க்குத்தான் இடங் கொடுப்பானா? அப்பா! ஈயவே ஈயான். சிலந்தி புகுந்தாலோ, கூச்சலிடுவான்! பதறுவான்! கதறுவான்! என்னை இழிவுபடுத்தும் பொருட்டே இவ்வாறு வைகின்றனன். நான் கொடுத்த விந்த விடுதியைக் குலைக்கின்றனன். இந்தச் சோறிடு துருத்தியிற் புகுந்து கொண்டுதான் உங்களுக்கெதிரே கொலுவிருக்கின்றனனா? அதை விட்டு அப்புறப்பட்டானானால், கொலுவெங்கே? நுங்கள் கழகமெங்கே? அவ்வாறிருந்தும் இம்மெய்ஞ்ஞானம் செய்வது கேளுங்கள்!

கூ. 'குடியிருக்கும் வீட்டின் கூரையைப் பிடுங்கலாமா?' என்கிற மூதுரையையும் பொருட்படுத்தாது, பாருங்கள், என் வீட்டிற் குடியிருந்து, என் சோறு தின்று, என் தண்ணீர் குடித்து, நான் சம்புபோல் வளர்த்துக் கொடுத்த கூரையைக் கொத்தோடே பிடுங்கி யெறிந்து மொட்டை யாக்கியதுமல்லாமல், பொருளருமை, இல்லருமை யுணர்ந்த யான் கூரையில்லா வோட்டில் வெப்பந்தாக்குமே யென்று இன்னுமொரு முறை கூரையை வளர்த்தலாமென முயன்றாலோ, ஐயோ கெடுவான்! அது விரற்

* தாயுமானவர்.

† சிலந்திப்பூச்சி சிலந்திக்கட்டி.

கடையிற் பாதி வளருமுன்னே செதுக்கிக் கொட்டி விடுகின்றனன். மழைக்குங் காற்றிற்கும் வெய்யலுக்குங் குளிருக்கும் ஈட்டிற்கும் பாட்டிற்கும் தாங்கிக் கொண்டிருந்த கூரையை. என்மீது ஆற்ருமைக்கு ஏனப்பா பிடுங்கியெறிய வேண்டும்? அப்புறம் நிழலும், மறைவும், குடையும், துப்பட்டியும், பஞ்சடைத்த பையுங் தேடுவானேன்? அவைகளெல்லாம் மாத்திரம் என்ன இந்த மெய்ஜ்ஞாநத்திற்கா சேர்ந்தவை? அவைகளும் என்னுடையவைதானே? என் மீது ஆற்ருமைக்குக் கூரையொன்றைப் பிடுங்கியெறியவே. என்னிடம் பலவேறு பொருள்களை வேண்டிப் பெற நேர்ந்தது பார்த்தாயினும் நாணந் தோன்ருதா? என் வீட்டிற்கும் இம்மெய்ஜ்ஞாநத்தின் வீட்டிற்கும் வேற்றுமை தோன்றவேண்டுமென்று. திருடிய குதரையின் காதையும் வாலையும் வெட்டிவிட்டவன் போலக். கூரையைப் பிடுங்கினனென்ருலோ. அவ்வாறு செய்வதைவிட்டுச் சம்புபோலவிருந்த கூரையைப் பழுதை பழுதையாகத் திரித்துவிட்டேனுமிருந்தால், கூரையின்பயனுங் கெடாமல், அடையாள * மும் உண்டாக்கிக் கொண்டிருக்கலாமே! இத்தகைய தீப்பண்பனுகிய மெய்ஜ்ஞாநத்தை ஏனப்பா கோரினீர்கள்?

ம. இல்லை, செல்வாக்குக் கண்டாவது தெரிந்தெடுத்தீர்களா? இல்லையே. என் செல்வாக்கிற்கு மாற்றுரைத்துக் காட்டத்தான் இம்மெய்ஜ்ஞாநத்திற்குண்டா? அந்தோ! பிழைத்தீர்கள், முக்காலத்தும் மூவிடத்துமுள்ள என் செல்வாக்கை உங்கள் வாய்கொண்டே சொல்விக்கிறேன். சற்று நான் கேட்பதற்கு விடை பகருங்கள்.

கேள்வி.	விடை.
இதோ என் கைக்குள்ளே யிருப்பதென்ன? ...	தெரியாது.
இதோ என் சட்டைப்பைக்குள் ளிருப்பதென்ன? ..	தெரியாது.
என் னுள்ளத்துள்ளே யிருப்பதென்ன? ...	தெரியாது.
என் னுடற்குள்ளே யிருப்பதென்னென்ன? ...	தெரியாது.
யான் என்கிறேனே அதுயார் தெரியுமா? ...	தெரியாது.
உங்களுள்ளே யிருப்பதின்னதெனத் திண்ணமாகத் தெரியுமா? ...	தெரியாது.
இவ்வையத்துள்ளே பரவிநிற்ப தின்னதெனத் தெரியுமா? ...	தெரியாது.
இவ்வையத்தின் புறம்பே பரவிநிற்ப தீதெனத் தெரியுமா? ...	தெரியாது.

* அடையாள மென்றது சிவ வேடமாகிய சடை முடியை.

அணுவிற்குள்ளே யாண்டுநிற்ப
தின்னதெனத் தெரியுமா? ... தெரியாது.
இவ்வையம் உண்டாகுமுன் என்னவிருந்தது
தெரியுமா? ... தெரியாது.
இவ்வையத்திற்குப்பின் என்னவிருக்குந்
தெரியுமா? ... தெரியாது.
இவ்வையம் என்னவாய்க்கொண்டு
போகின்றது தெரியுமா? ... தெரியாது.
நீங்கள் முன் என்னவா யிருந்தீர்கள் தெரியுமா? ... தெரியாது.
நீங்கள் பின் என்ன வாவீர்கள் தெரியுமா? ... தெரியாது.
கடவுள் யார் திண்ணமாகத் தெரியுமா? ... தெரியாது.
பிரமம் என்பது எப்படியிருக்குந் தெரியுமா? ... தெரியாது.
எங்கு மிருப்ப தின்னதெனத் தெரியுமா? ... தெரியாது
எங்கு மில்லாத தின்னதெனத் தெரியுமா? .. தெரியாது.
மெய்ஞ்ஞானத்தின் புறத் திருமேனிக்குள்ளே
என்னென்ன விருக்கின்றன வெனத்
திண்ணமாகத் தெரியுமா? ... தெரியாது.
நுங்கள் யாவர்க்கும் ஒரு பொதுப்பெயர்
வைத்திருக்கிறேன் தெரியுமா? ... தெரியாது.
எனக்கு நீங்களெல்லோருஞ் சேர்ந்து ஒரு
சிறப்புப் பெயர் தூய்ந்தமிழில் புதிதென
நினைந்து பண்டையதை வைத்திருக்கின்
றீர்கள் தெரியுமா? ... தெரியாது.
இந்தக் கேள்விகள் எல்லாம் ஏன் கேட்டேன்
தெரியுமா? ... தெரியாது.
* இந்த உடைக்குள் இருப்பது யார் தெரியுமா? .. அஞ்ஞான
மென்கிற தாங்கள்தான்.

ஆம், ஆம். நீங்களெல்லோரும் இந்த அஞ்ஞானத்தினுடைய சொக்குப் பொடியில் மயங்கி, உங்களையும் அறியாது உண்மையே பேசிவிட்டீர்கள்.

மக. அஞ்ஞானம் என்பது ஆரியர்கள் என்னைச் சுட்டிக் சொல்லுகின்ற பெயர் அதற்குத் தூய்ந்தமிழில் தகுதியாகத் 'தெரியாது' என்று எனக்குப் பெயர் வைத்தீர்கள். என் பெயர் 'தெரியாது' என்பதுதான். இந்தத் 'தெரியாது' என்கிற அஞ்ஞானம், எங்கெங்கே, எவ்வெப்போது, எவ்வெப்படி இருக்கின்றதென ஒப்புக் கொண்டீர்கள்; இப்போது நினைத்துப் பாருங்கள். என் கையி லிருப்பதும், என் சட்டைப்பையி லிருப்பதும், என்னுள்ளத்துள் ளிருப்பதும், என்னுடற்குள் ளிருப்பதும், உங்களுள்ளே யிருப்பதும், இவ் வையத்துள்ளே யிருப்

* இது சொற்பொழிவாளர் தன்னையே சுட்டிக் காட்டிக் கேட்டது.

பதும், இவ்வையத்தின் புறம்பே நிற்பதும், அணுவிற்குள்ளே யாண்டு நிற்பதும். இவ்வைய முண்டாகுமுன் இருந்ததும், இவ்வையத்திற்குப் பின்னிருக்கப்போவதும், நீங்களிதற்கு முன்னிருந்ததும் இனியிருக்கப் போவதும், கடவுளும், பிரமமும், எங்குமுள்ளதும், எங்குமில்லாததும், நுங்கள் பொதுப்பெயரும், எனது சிறப்புப்பெயரும் இந்தக் கேள்விகளும் உட்படத் 'தெரியாது' என்கிற அஜ்ஞாநமே யென்று நீங்கள் ஒப்புக்கொண்டதும் போதாமல், மெய்ஜ்ஞாநத்தின் புறத்திருமேனி தப்ப உள்ளிருப்பதும் 'தெரியாது' என்கிற அஜ்ஞாநமே யென்றும் ஒப்பினீர்கள் இந்த உடைக்குள் ளிருப்பது அஜ்ஞாந மென்கிற யானென்பதையும் ஒப்பினீர்கள்.

௰௨ உங்களுக்குத்தான் தானாகவுணரு மாற்றலிலதேனும், நாமகள் பிறப்பாகப் போற்றப்படும் ஔவைக் கிழவியாரே நாமகள் கூற்றாகக் கூறிய,

'கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள் — சற்றும்
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்.'

என்பதையாவது படித்துணருங்கள். இங்கே 'கற்றது' என்றது மெய்ஜ்ஞாநத்தை; 'கல்லாதது' என்றது என்னை — அஜ்ஞாநத்தை. அவள் நன்கெடுத்துக் காட்டியவண்ணம், மெய்ஜ்ஞாநம் உங்கள் கையிலெடுத்துப் பாராட்டிய மண்ணாங்கட்டிக்கு ஒப்பு. யானே இவ்வுலகிற்கு ஒப்பு. அந்த மண்ணாங்கட்டிதான் என்ன? என்னைவிட வேறா? இல்லை, நீங்கள் தடுமாறி அம்மண்ணாங்கட்டியை நழுவ விடுவீர்களானால், அது மறுபடியும் என்னோடு (அஜ்ஞாநத்தோடு) கலந்து இரண்டற்றுவிடும். இந்த ஒப்புமையிலுங்கூடப் பாருங்கள்; இம்மெய்ஜ்ஞாநத்தின் தீத்தன்மையை நன்கு புலப்படுத்தி யிருக்கின்றனள். அந்த மண்ணாங்கட்டியை நீங்கள் தான் தாங்கவேண்டும்; நீங்கள் தாங்கி நிற்கும் வரையில் மெய்ஜ்ஞாநமாக விளங்கும். தடுமாறிக் கீழே விட்டீர்களோ, அது மறைந்து போச்சுது யானோ அப்படியல்ல; அசையா நிலையதாகிய வையகமாகவிருந்து உங்களையுந் தாங்கி, விழுந்த மண்ணாங்கட்டியையும் தாங்கி நிற்பவன் இவ்வாறு முக்காலத்திலும், மூவிடத்திலும், கடவுளும், பிரமமும் எல்லாம் யானாகவுள்ள அஜ்ஞாநத்தைவிடுத்து, நீர்க்குமிழி போன்று, நற்குடிப் பிறப்பின்றி நற்றன்மையின்றி, புறத்திருமேனி வரையில் வேறாகத் தோன்றிய இம் மெய்ஜ்ஞாநத்தை எம்மாட்சி கண்டு தெரிந்தெடுத்தீர்கள்?

௰௩. இம்மெய்ஞ்ஞாநம், என் செல்வாக்கைக் கண்டு, ஆற்ருமைகொண்டு, 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்று தருக்குகிற மாயாவாதியென்று என்னை இழித்துக் கூறியும்; சிவம், சக்தி, மாயை அல்லது பதி, பசு, பாசம் என்கின்ற முப்பொருள்களென்றுமுள்ளன வென்று புகன்றும், உங்களை ஏமாற்றித் தன் கைக்குட் போட்டுக் கொண்டனன் போலும். நீங்கள் பல்லாண்டுகளாக ஆண்டானடிமைத் திறத்திலேயே ஒழுகி வந்தவர்களாதலின்.

'பழக்கங் கொடியதுபார் பாறையினுங் கோழி
கிழிக்கும் பொலியைக் கிளறும்.' *

என்றவாங்கு, உங்கள் பழக்கக் கேட்டால் ஆண்டான் வேறு, அடிமை வேறு, என்று ஏற்றுக்கொண்டீர்கள். ஆண்டானையும் அடிமையையும் உள்ளிருந்தாட்டும், ஆட்டுவிக்கும் அஜ்ஞாநம் இருக்கிறே னென்பது அஜ்ஞாநத்திஞல் மறந்தனிர். யான் உள்ளே புகாவிடின் உங்கள் சிவன்ருன் கூத்தாடுவாஞ? அவன் கூத்தாடாவிடின், நீ, நான், அவன், என்கின்ற வேற்றுமையுணர்ச்சியோடு இவ்விடம் குழுமியிருப்பீர்களா? நன்ருக வுன்னிப் பாருங்கள். உங்கள் மெய்ஞ்ஞாநத்தையே கேளுங்கள், என்னருமந்த செல்வர்களே!

௰௪. இந்த மெய்ஞ்ஞாநத்திற்கு என்னை நீங்கிப் பேசவே நாவெழாது; நடக்கக் காலெழாது; ஒரு வேலைக்கு முதவான். அதெல்லாம் என் வன்மைக்குச் சான்று.

'மாயையை யகன்ரு னடக்கக் காலெழுமோ
வாயிடை மாற்றமொன் றுண்டோ
போயொரு விடய முணமனம் வருமோ
பொருந்துறும் பகலிர வுளவோ.' †

என்ற வுண்மையையும் ஒப்புக்கொள்வன். ஆயினுந் தற்சிறப்பு வேண்டி, 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்பதை மறுத்து, மூப்பொரு ளுண்டென்பன். அவற்றுள் பாசம், மாயை என்கின்ற இழிபெயர் கொடுத்து மறைத்து, என்னை மூன்றிலொன்ருகச்

---

* ஒழிவிலொடுக்கம். † பிரபுலிங்கலீலை.

சொல்வன் இம் மெய்ஜ்ஞாநத்தை வற்புறுத்திச் சேளுங்கள். அந்தப் பசு என்கின்ற சக்திக்கு என்னை நீங்கி நிற்கச் சக்தி யுண்டா? இச்சக்தியில்லாததைச் சக்தி * யென்றது முரணெனனும் பாவழகு போலும்! அந்தப் பதி யென்கின்ற சிவன்றான் நான் புகாவிடின் கூத்தாடுவானா? என்ன போங்கள் இதெல்லாம் கேட்டும் உணர்ந்தும், ஒப்பற்றவென் செல்வாக்கை மறந்து, இருக்குமிடந் தெரியாதிருந்த மெய்ஜ்ஞாநத்தின் முப்பொருட் புரட்டுக்கு வீணாக வாளாயினீர்

ம்ரு 'சர்வம் ப்ரஹ்மமயம்' என்பதும் 'அஹம்ப்ரஹ்மாஸ்மி' என்பதும் உங்களுக்குத் தெளிவாக விளங்காவிட்டாலும், பொருள்படாச் சொற்களை யகற்றி, அவைகளுக் கிணையான பொருள்படுஞ் சொற்களையமைத்து ஓதுவீர்களானால், உங்களுக்குச் சுயானுபவம் என்கின்ற தற்காட்சி வந்துவிடும் பிரமம் என்றால் என்னவென்று யான் கேட்டபோது சரியாகவே விடையளித்தீர்கள்; அதாவது 'தெரியாது' என்று சொன்னீர்கள். 'தெரியாது' என்றால் நான் அதாவது அஜ்ஞாநம் என்று உங்களுக்குந் தெரியும். இப்போது 'ப்ரஹ்மம்' என்பதற்குப் படியாகத் 'தெரியாது' அதாவது 'அஜ்ஞாநம்' என்பதையமைத்து ஓதிப் பாருங்கள். 'சர்வம் ப்ரஹ்ம மயம்' என்பதும், 'சர்வம் அஜ்ஞாந மயம்' என்பதும் ஒன்றே. அவ்வாறே 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்பதும், 'அஹம் அஜ்ஞாநாஸ்மி' என்பதும் ஒன்றே. இப்போது உங்களுக்குத் தற்காட்சி வந்து விட்டது; ஐயமேயில்லை.

'அஹம் ப்ரஹ்மாஸ்மி'
'அஹம் அஜ்ஞாநாஸ்மி'
'ப்ரஹ்மோஹம் அஜ்ஞாநாஸ்மி'
'அஜ்ஞாநோஹம் ப்ரஹ்மாஸ்மி'

என்பன வெல்லாம் ஒருண்மையையே குறிப்பன. அஜ்ஞாநத்தினுடைய செல்வாக்கை விரிவாக வொப்புக்கொண்ட நீங்கள், மேற்சொன்ன வுண்மையைக் கண்கூடாகக் காண வினி யென்ன தடை? இப்போதேனும் மெய்ஜ்ஞாநத்தின் முப்பொருட் புரட்டைச் செவ்வனே யறிந்து தவறொழுக்கிற்கு வருந்தீரோ? அஜ்ஞாநோஹம்பாவனை செய்யாமலே, என்னோ டிரண்டற்றிருக்கும் நீவிர், சிவோஹம்பாவனை செய்து, சிவமென்ற என்னொரு

---

* சக்தி யென்றது ஆன்ம சக்தியை.

பிள்ளையோடு இரண்டற்றிருந்தனிர் யாவர்? கையைத்தூக்குங்கள் பார்ப்போம். வெளிநீறு பூசி வியர்வை நாற்றம் போக்குவதையன்றி, உள் நீறு பூசி உயிர் நாற்றம் போக்கியோர் யார்? கையைத் தூக்குங்கள்.

௰௬. செல்வாக்கிருக்கட்டும், மெய்ஞ்ஞானத்தின் வடிவழகைக் கண்டு வாயுங்காந்தீர்களா? கட்டழகைக் கண்டு கண்கூசி மருண்டீர்களா? அழகென்பதெல்லாம் எனக்கும் என்வழிவந்த திருக்கூட்டங்களுக்குமே உள்ளது. உரியது இம் மெய்ஞ்ஞானம் என்னோடு ஏட்டிக்குப் போட்டிபோட்டு, தகிடிக்குத் திகிடி செய்து. அழகென்பது சற்றுமில்லா திழந்து, அதன் எதிர்மறை அதாவது இழிவடிவையே தனதாக்கிக்கொண்டனன், எந் நாட்டுப் பாவலரும் எழிலென வுணர்ந்து பாடிக் களித்தது, என் வழிவழி வந்த அஞ்ஞானச் செல்வங்களான தலைகாலின்றிய மலையையோ? போக்கின்றி யலைமோதும் கடலையோ? ஒன்றுமின்றி யூக்குவிக்கும் வானையோ? கண் மண் தெரியாது கண்டபடி வீசுங் காற்றையோ? தனக்குத்தானே வலஞ்செய்துலும் நிலவைப்பையோ? புணர்ந்தோர்க் கமிழ்தும் பிரிந்தோர்க் கழலுமாய திங்களையோ? உழைக்கப் பிழைக்கவூக்கியெழும்பும் காலைக் கதிரவனையோ? துய்க்க வுறங்க விட்டுச் செல்லும் மாலைக் கதிரவனையோ? வானின்று வழங்கு மெழிலியையோ? சூல்கொண்ட இப்பியையோ? மால்கொண்ட களிற்றையோ? தலை கீழாக வுடல் மேலாக உண்டு வாழும் புல் பூடுகளையோ? கீழ் நோக்கி விலங்கி வாழும் விலங்கினத்தையோ? பாடியது. வேறெவற்றைச் செப்புங்கள்! இயற்கையழகு அஞ்ஞானக் களஞ்சியமாகிய மேற்கூறியவற்றிற்றான் உளதெனப் பன்னாட்டுப் பாவலரும் ஒப்பியுள்ளனர். நமதிந்தியப் பெரும்புலவர் இரவீந்த்ர நாதரும், மெய்ஞ்ஞானத்தின் உறவு கொண்டாடக் கூடிய மக்கட் பிறப்பினர் இருந்து வாழும் நகரப் பக்கம் கூடாதென வொழித்து, அஞ்ஞானத் திருக்கூட்டங்கள் வாழும் காட்டகத்தினன்றோ தன் கல்லூரியை யமைத்தனர்!

௰௭. மக்கட் பகுதியிலும் பெண்பாலார் அழகை எந்நாட்டுப் பாவல்லவரும் புனைந்துரைத்திருக்கின்றனரே யென்று எனக்கு மறுப்புப் பேச முன்னிடுவீரேல், எனது கட்சியையே முற்றிலும் நிலைநாட்டினீராவீர். எறும்பிகள் நற்றீனியென்றேமாற்றமடையச் செழுந்தழை பரப்பி, அவ்வெறும்பிகளைக் குழியில் வீழ்த்திப் பிடிப்பதுபோல, மெய்ஞ்ஞானத்தைப் பிடிக்க வந்த வேட்டுவர்கள் இம்மாதரா ரென வறிகிலிர் போலும்!

'பெண்மை யென்பது பெரும் பேதைமைத்தே ' என்றும்,
'பேதைமை யென்பது மாதர்க் கணிகலம் '

என்றும் வழங்கிவரும் மூதுரைகளைக் கருதிப்பார்ப்பிரேல், பேதைமை அதாவது அஜ்ஞாநமே அவர்கள் உள்ளும் புறம்பு மென்பதும், அஜ்ஞாநமே அவர்களுக் கணிகலனென்பதும். அதனாற்றானே அவர்கள் அழகில் மிஞ்சினார்களென்பதும், அவ் வஜ்ஞாந மேலீட்டாற் பெற்ற வழகு கண்டே புலவரெல்லாம் அவர்கள் பாட்டே பாடி மகிழ்ந்தனரென்பதும் நன்கு புலப் படும் அது பொருட்டே ஆங்கிலரும் பெண்பாலை அழகி லுயரிய பால் (Fairer sex) என்றனர்.

௰அ. மெய்ஜ்ஞாநத்திற்கு அழகே யில்லை யென்பதற்கும். அழகெல்லாம் எனக்கும் என் வழி வந்தோர்க்குமே யுள்ள தென்பதற்கும், ஒத்துப் பாருங்கள்.

தாயுமானவன் தலையைப் பாடினா னெவன்?
    தையலாரின் தலையைப் பாடாதா னெவன்?
இராமலிங்கத்தின் இடையைப் பாடினா னெவன்?
    இளமைப்பெண்ணின் இடையைப் பாடாதா னெவன்?
தொல்காப்பியரின் தொடையைப் பாடினா னெவன்?
    தோகைமாரின் தொடையைப் பாடாதா னெவன்?
அகத்தியர் முகத்தி னழகைப் பாடினா னெவன்?
    அணங்கனார் முகத்தி னழகைப் பாடாதா னெவன்?

சற்று விடை பகருங்கள் பார்ப்போம்.

௰கூ. மெய்ஜ்ஞாநப் பொய்வடிவு பூண்டிருந்த அருணகிரியும், இராமலிங்கமும், பட்டினத்தடிகளும். இன்னும் பலரும் அஜ்ஞாநப் பேரழகி வீடுபட்டுத் தாஙகமுடியாது. இகழ்வது போன்று பாசாங்குசெய்தும், உருவகம் போலப் பாசாங்கு செய்தும், பிறர் கண்மூடிப். பெண்ணழகிகளின் பேரெழிலையும் கலவி யையுமே பாடிப் பாடிச் சிற்றின்பம், சிற்றின்பம். சிற்றின்பம். என்று பன்முறை சொல்லிச் சொல்லிப் பலதுளி பெருவெள்ள மென்பதற் கிணங்கப். பேரின்ப மாக்கிக் கொண்டு வாழ்ந்திருந் தனரெனின், என்னழகி வீடுபடாதார் யாவர்? இவர்கள் மெய்ஜ்ஞாநங்க ளென்றால் என்னைச் சற்று மறந்துதான் வேறு பாட்டுப் பாடலாகாதோ! அவர்கள் மெய்ஜ்ஞாநிக ளென் பதற்கும் என் பாட்டுத்தானா கிடைத்தது! வேறு என்னதான் கிடைக்கும்?

தாயுமானவர் பாட்டொன்று கேளுங்கள்.

'தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலேசிற்
றிடையிலே நடையிலே
சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே
சிறுபிறை நுதற்கீற்றிலே
பொட்டிலே யவர்கட்டு பட்டிலே புனைகந்த
பொடியிலே யடியிலேமேற்
பூரித்த முலையிலே நிற்கின்ற நிலையிலே
புந்திதனை நுழையவிட்டு'
இதன்மேல் இனி நுழையவிடக் கூடாதெனப் பாடுகிறார்.

இராமலிங்கர் பாட்டொன்று கேளுங்கள்.

'கண்ணுறங்கே னுறங்கினுமென் கணவரொடு கலக்குங்
கனவேகண் டுளமகிழ்வேன் கனவொன்றோ நனவும்
எண்ணடங்காப் பெருஞ்சோதி யென்னிறைவ ரெனையே
யிணைந்திரவு பகல்காணு தின்புறச்செய் கின்றார்
மண்ணுறங்கு மலையுறங்கு மலைகடலு முறங்கு
மற்றுளவெல் லாமுறங்கும் மாநிலத்தே நமது
பெண்ணுறங்கா ளெனத்தாயர் பேசிமகிழ் கின்றார்
பெண்களெலாங் கூசுகின்றார் பெருந்தவஞ் செய்திலரே.'
இவருற்ற பேரின்பம் இருந்தவா வியப்பே வியப்பு!

பட்டினத்தார் பாட்டைக் கேளுங்கள்.

'அஞ்சு வயதாகி விளையாடியே
உயர்தருஞான குருவுபதேச முத்தமிழின்கலை யுங்கரைகண்டு
வளர்பிறையென்று பலரும்விளம்ப வாழ்பதினாறு
பிராயமும்வந்து
மயிர்முடிகோதி யறுபதநீல வண்டிமிர்தண்டொடை
கொண்டைபுனைந்து
மணிபொனிலங்கு பணிகளணிந்து மாகதர்போகதர்
கூடிவணங்க
மதனசொரூப னிவனெனமோக மங்கையர்கண்டு
மருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழியவெறிந்து மாமயில்போலவர்
போவதுகண்டு
மனதுபொரும லவர்பிறகோடி மங்கலசெங்கல
சந்திகழ்கொங்கை
மருவமுயங்கி யிதழமுதுண்டு தேடியமாமுதல் சேரவழங்கி

ஒருமுதலாகி முதுபொருளாயி ருந்ததனங்களும் வம்பிலிழந்து
மதனசுகந்த விதனமிதென்று வாலிபகோலமும் வேறுபிரிந்து
வளமையுமாறி யிளமையுமாறி வன்பல்விழுந்திரு கண்களிருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து வாதவிரோத
குரோதமடைந்து
செங்கையினிலோர் தடியுமாகியே'

இதில் ஐந்து வயதிலிருந்து பதினாறு வயது வருவதற்கு ஒன்றரை வரியில் முடித்து, முத்தமிழின் கரை கண்டதெல்லாம் ஒரு சிடிக்கையில் முடித்துவிட்டு என்னுடைய விளையாட்டிற்கு எட்டு வரி செலவிட்டு, நரை திரை, செங்கையிலோர் தடி யுட்பட இரண்டு வரியில் முடித்துவிட்டனர். இதனால் இந்த மெய்ஜ்ஞானத்தின் போக்கு எதிலென்பதும், என்னுடைய செங்கோல் வலிமையும் விளங்கும்.

இன்னும் அருணகிரியார் பாடிய திருப்புகழென்கிற திருவண்ணார் புகழைக் கேளுங்கள் :

'மலரணி கொண்டைச் சொருக்கி லேயவள்
சொலுமொழி யின்பச் செருக்கி லேகொடு
மையுமடர் நெஞ்சத் திருக்கி லேமுக — மதியாலே
மருவுநி தம்பத் தடத்தி லேநிறை
பரிமள கொங்கைக் குடத்தி லேமிக
வலியவும் வந்தொத் திடத்தி லேவிழி—வலையாலே
நிலவெறி யங்கக் குலுக்கி லேயெழில்
வளைபுளை செய்கைக் கிலுக்கு லேகன
நிதிபறி யந்தப் பிலுக்கி லேசெயு — மொயிலாலே
நிதமிய லுந்தூர்க் குணத்தி லேபர
வசமுட னன்புற் றிணக்கி லேயொரு
நிமிஷமி ணங்கிக் கணத்தி லேவெகு—மதிகேடாய்
அலையநி னைந்துற் பனத்தி லேயநு
தினமிகு மென்சொப் பனத்தி லேவர
வறிவும ழிந்தற் பனத்தி லேநித—முலைவேனோ?'
என்று சொல்லி உலைகின்றனர்.

'அருக்கு மங்கையர் மலரடி வருடியுங்
கருத்த றிந்தபி னரைதனி லுடைதனை
யவிழ்த்து மங்குள வரசிலை தடவியு—மிருதோளுற்
றணைத்து மங்கையி னடிதொறு நகமெழ
வுதட்டை மென்றுபல் லிடுகுறி களுமிட

வடிக்க ளந்தனின் மயில்குயில் புறவென—மிகவாய்விட்
டுருக்கு மங்கியின் மெழுகென வுருகிய
சிரத்தை மிஞ்சிடு மனுபவ முறுபல
முறக்கை யின்கனி நிகரென விலகிய—மூலமேல்வீழ்ந்
துருக்க லங்கிமெ யுருகிட வழுதுரு
பெருத்த வுந்தியின் முழுகிமெ யுணர்வற
வுழைத்திடுங்கன கலவியை மகிழ்வது—தவிர்வேனோ?'
என்று சொல்லிச் சொல்லி மனப்பால் குடிப்பதில் தவிர்தலிலர்.

இவர் 'சீச்சீ! வேண்டாம், வேண்டாம்.' என்று வெறுத்துத் துப்புகிற சித்ரத் தனத்திற்கு இவர் சொல்லுகிற வக்கணையைக் கேளுங்கள்.

'கமல மொட்டைக் கட்ட ழித்துக் குமிழியை
நிலைகு லைத்துப் பொற்கு டத்தைத் தமனிய
கலச வர்க்கத்தைத் தகர்த்துக் குலையற—இளநீரைக்
கறுவி வட்டைப் பிற்று ரத்திப் பொருதப
சயம்வி ளைத்துச் செப்படித்துக் குலவிய
கரிம ருப்பைப் புக்கொ டித்துத் திறல்மத—னபிஷேகம்
அமலர் நெற்றிக் கட்ட ழற்குட் பொடிசெய்து
அதிக சக்கரப் புட்ப றக்கக் கொடுமையி
னடல்படைத்தச் சப்ப டுத்திச் சபதமொ—டிருதாளம்
அறைதல் கற்பித் துப்பொ ருப்பைப் பரவிய
சிறக றுப்பித் துக்க திர்த்துப் புடைபடு
மபிந வச்சித் ரத்தன'மாம்!!!

உம். இன்னுஞ் சற்றுப் பொறுமையுடன் கேளுங்கள். அழகைப் பாடத் தேடியெடுத்த உருப்படிகள் யாவும் என்னினத்தின ரென்பது மட்டுமன்று அவர்களிடத்து இம் மெய்ஞ்ஞானச் சார்பான கூறுபாடேதேனும் நேருபாடாக வமைந்திருப்பின், அக்கூறுபாடுகளை யக்கரையோடு விலக்கி, எனது சார்பானவற்றையே பாடிப் பாடிக் களித்தனர். மெய்ஞ்ஞானக் கருவிகள் தலையிடத்தும், அஞ்ஞானக் கருவிகள் உடலிடத்தும் உளவெனக் கேட்டிருப்பீர்கள் அஞ்ஞானப் பேரழகினளாய பெண்ணைப் பாடப் புகுந்த புலவன், அஞ்ஞானக்கருவிகள் திகழும் உடற்பகுதியின் நுனிப் புறத்தைப் பிடித்துத் தொடங்கி, (பாதாதிகேசம்) தன் பாவன்மையிற் பெரும்பான்மையைக் கீழே செல

விட்டுக், கடைசியாக மெய்ஞ்ஞாநக் கருவிகளிருக்கு மிடமாகிய தலையைப் பாடவிரும்பினன் அவ்வாறு இறுதியிற் பாடவிடுத்த தலைப்பகுதியிலும், மெய்ஞ்ஞாநப் பாங்கான சட்டித்தலை, ஏறு நெற்றி, முனைநோக்குங்கண், என்பனவற்றையா அழகென்று கணக்கிட்டனன் ? இன்று. இத்தகைய வுருவை இழிவடிவென்று வெட்ட வெளியாகவே சொல்லிவிட்டுத், தலையிடத்தனவேனும் எனது தொழிலை அங்கிருந்து நடத்தும் வெல்லுஞ் சொல், கொல்லுங் கண், வேட்கை நகை, குறுகிய நெற்றி, இருண்ட குழல், மருட்டும் பார்வை, கொவ்வை யிதழ் இவைகளையே பாராட்டிச் சீராட்டிப் பாடுவான். மெய்ஞ்ஞாநத்தின் சார்பு சிறிது மிகையாகத் தன் தீவினையாற் பெற்ற ஆண்பாலைத்தான் பாடப் புகுபவன், அங்கும் என் ஆட்சியை விளக்கும் வடிவு. தொழில் களையே உண்மையழகென வுணர்ந்து, முறுக்கு மீசை விரிந்த மார்பு, மலைபோன்ற தோள், காளைபோன்ற நடை என்று பலவாருகப் புகழ்வன்.

உக. அஜ்ஞாநப் படையாளர்களாகிய பெண்பாலிற் ருேன் றியோ ளாயினும், அப்படைத் தொழிலிலலுத்து, உதவிச் சம் பளம்பெற்று மெய்ஞ்ஞாநத்தை நாடிச்செல்லும் நரைமூதாட்டி பெண்பாலே யாயினும். அவளுடைய நரைத்த கூந்தலையும். திரைத்த நெற்றியையும். தொங்கு கன்னங்களையும். பிறவும் எப் புலவர் அக்கரையோடு அழகெனப் புனைந்து பாடினுர் ? பாடுகிருர் ? பாடுவார் ?

உஉ. நீங்கள் முதன் முக்கடவுளரென வணங்குகின்றீர் களே அவர்கள் தாம் எனக்கு முதற் பிள்ளைகள் அஜ்ஞாநம் என்கிற என் தொடக்கமின்றேல், அவர்கள் உருவாகியே யிரா ரென்பது உங்கள் மெய்ஞ்ஞாநத்தைக் கேட்டாலும் தெரியும் அம் மூவருள்ளும், திருமால்தான் என் பெயரெடுக்க வந்த அருமைத் திருப்பிள்ளை. அவனிடத்து எனக்கும், என்னிடத்து அவனுக் கும், தீராத அன்புண்டு என் (அஜ்ஞாநத்தின்) ஆசை வடி வங்களான மீன், ஆமை, பன்றி, கோளரி ஆகிய வடிவங்க ளெடுத்து விளையாடி, தான் சற்றுந் துன்புருது பகைவர் களைக் கிழித்தெறிந்தனன். அவனுங்கூட இம் மெய்ஞ்ஞாநத்தின் வடிவாகிய மக்கள்வடிவில் சிறிது மருண்டு. குள்ளன், கோதண்ட ராமன், பரசுராமன், பலராமன், கண்ணன் என்று தோன்றி, இம் மெய்ஞ்ஞாநத்தின் வடிவு பூண்ட குற்றத்திற்காக. அவன் பகைவரை யடக்குமுன் தான் பட்டபா டளவில்லை இது கண்டு, இனி இந்த மெய்ஞ்ஞாநத்தினுடைய வடிவு கூடவே கூடாதென்று